செய்தி வெளியீடு எண்: 028 நாள்: 05.01.2018

## தமிழ் வளர்ச்சித் துறை

## செய்தி வெளியீடு

## முதலமைச்சர் கணினித் தமிழ் விருது

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தமிழ் வளர்ச்சியைக் கருத்திற்கொண்டு வளர்ந்துவரும் கணினியுகத்திற்கேற்ப தமிழ்மொழியைக் கணினியில் அனைத்து நிலைகளிலும் பயன்படுத்தும் வகையில் சிறந்த தமிழ் மென்பொருளை உருவாக்குபவர்களுக்கு **முதலமைச்சர் கணினித் தமிழ் விருது வழங்கப்படும் என்றும்**, விருது பெறுபவர்களுக்கு விருதுத் தொகையாக ரூபாய் 1,00,000/-, ஒரு சவரன் தங்கப்பதக்கம் மற்றும் தகுதியுரை வழங்கப்படும் எனவும் 14.5.2013 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண் 110-இன் கீழ் அறிவித்தார்கள்.

அவ்வறிவிப்பின்படி ஆண்டுதோறும் சிறந்த மென்பொருள் தெரிவு செய்யப்பட்டு மென்பொருளைத் தயாரித்த தனிநபர்/நிறுவனத்திற்கு விருது வழங்கப்பட்டு வருகிறது. அவ்வகையில் 2017ஆம் ஆண்டு **முதலமைச்சர் கணினித் தமிழ் விருதுக்குத்** தனி நபர்/நிறுவனத்திடமிருந்து தமிழ் மென்பொருள்கள் வரவேற்கப்பட்டு, விருதுக்கான விண்ணப்பம் வந்து சேரவேண்டிய இறுதி நாள் 2.1.2018 என ஏற்கெனவே செய்தி வெளியிடப்பட்டது.

தற்பொழுது விருதுக்கு விண்ணப்பிக்கும் காலம் 31.1.2018 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. போட்டிக்கு அனுப்பப்படவுள்ள மென்பொருள்கள் 2014, 2015, 2016ஆம் ஆண்டுகளில் தயாரிக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும். இவ்விருதுக்குரிய விண்ணப்பம் மற்றும் விதிமுறைகளைத் தமிழ் வளர்ச்சித்துறையின் வலைத்தளத்தில் இலவசமாகப் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

விருதுக்கான விண்ணப்பம் தமிழ் வளர்ச்சி இயக்ககத்திற்கு
வந்து சேர வேண்டிய இறுதி நாள் **31. 01. 2018**

**அனுப்ப வேண்டிய முகவரி**

**தமிழ் வளர்ச்சி இயக்குநர்**
தமிழ் வளர்ச்சி வளாகம்
தமிழ்ச் சாலை, எழும்பூர்
சென்னை - 600 008

**தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி எண்கள்:** 044 28190412, 044 28190413
**மின்னஞ்சல்** : tamilvalarchithurai@gmail.com
**வலைத்தளம்** : www.tamilvalarchithurai.org

**தமிழ் வளர்ச்சி இயக்குநர்**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**